தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள் . சென்னை –06

ந.க. எண் : 054119/எம்2/இ2/2026 நாள் : 11.09.2026

பொருள்: பள்ளிக் கல்வி – இந்திய விண்வெளி ஆராய்ச்சி – மகேந்திரகிரி சார்பாக 04.10.2026 முதல் 10.10.2026 வரை நடைபெற உள்ள உலக விண்வெளி வார விழாவை முன்னிட்டு 9,10,11 மற்றும் 12ஆம் வகுப்பு பள்ளி மாணவ/மாணவியருக்கு மாநில அளவிலான கட்டுரைப் போட்டிகள் நடைபெறுதல் – விருப்பமுள்ள மாணவ/மாணவியர்கள் கலந்து கொள்ள தெரிவித்தல் – சார்பாக.

பார்வை இந்திய விண்வெளி ஆராய்ச்சி முதுநிலை நிர்வாக அதிகாரியின் கடிதம் Ref.IPRC/WSW/2026/01 dated 08.09.2026

*****

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம், மகேந்திரகிரி சார்பாக 04.10.2026 முதல் 10.10.2026 வரை நடைபெற உள்ள உலக விண்வெளி வார விழாவை முன்னிட்டு 9,10,11 மற்றும் 12ஆம் வகுப்பு பள்ளி மாணவ/மாணவியருக்கு மாநில அளவிலான கட்டுரைப் போட்டிகள் நடைபெற உள்ளதாக பார்வையில்காண் கடிதத்தின்மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் தமிழ்நாட்டைச் சேர்ந்த விருப்பமுள்ள மாணவ/மாணவியர்கள் பங்கேற்கலாம்.

கட்டுரைப்போட்டியின் தலைப்பு

| Standard | Medium | |
|---|---|---|
| | Tamil | English |
| IX–XII | வருங்கால ஏவுகலன்கள் | Emerging Trends in Rocketry |

| | |
|---|---|
| 1. | கட்டுரைகள் தமிழ் அல்லது ஆங்கிலத்தில் இருத்தல் அவசியம். |
| 2. | கட்டுரைகள் தெளிவாகவும், திருத்தமாகவும் மாணவ/மாணவியரின் கையெழுத்தில் A4 (210 x 297 மி.மீ) அளவு தாளில் 4 பக்கங்களுக்கு மிகாமலும், ஒவ்வொரு தாளிலும் ஒரு பக்கம் மட்டும் எழுதியிருக்கவும் வேண்டும். |
| 3. | போட்டியில் பங்கேற்கும் மாணவ/மாணவியரின் பெயர், வயது, வகுப்பு, பள்ளியின் பெயர், பள்ளியின் முகவரி, பெற்றோர் பெயர், வீட்டின் முகவரி, தொலைபேசி/அலைபேசி எண் ஆகியவை முன்தாளில் குறிப்பிட்டிருக்க வேண்டும். |
| 4. | இந்த கட்டுரை தங்களால்தான் எழுதப்பட்டது என்பதை உறுதிபடுத்த பள்ளியின் முதல்வர்/தலைமை ஆசிரியரிடமிருந்து ஒப்புதல் இணைக்கப் பட்டிருக்க வேண்டும். |

| | |
|---|---|
| 5. | கட்டுரைகள் 25 செப்டம்பர் 2026 அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ கீழ்க்கண முகவரிக்கு கிடைக்கும்படி தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். |
| 6. | தபால் உறையின்மேல் கட்டுரைப்போட்டி எனக் குறிப்பிடப்படவேண்டும் |

**கட்டுரைகள் அனுப்பவேண்டிய முகவரி**

**The Senior Administrative Officer,**
**ISRO Propulsion Complex (IPRC) Mahendragiri,**
**Tirunelveli District – 627 133.**
**Tamil Nadu.**

தமிழ் ஆங்கில கட்டுரைகளுக்கு தனித்தனியாக முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசுகள் வழங்கப்படும். போட்டியில் பரிசு பெற்றவர்களின் விவரங்கள் தனித்தனியாக தெரிவிக்கப்பட்டு 2026 அக்டோபர் 9ஆம் தேதி மகேந்திரகிரியில் நடக்கும் விழாவில் பரிசுகள் வழங்கப்பட்டும். மேலும் விவரங்களுக்கு கீழ்க்கண்ட தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி எண்.04637–281825.

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் தங்கள் கட்டுப்பாட்டிலுள்ள அனைத்து உயர்/மேல்நிலைப் பள்ளிகளுக்கும் தகவல் தெரிவித்து தொடர்நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது.

இணைப்பு கடிதம் நகல்

இயக்குநர்

11/9/26

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவரின் செயல்முறைகள்
ஓ.மு.எண்.4546/ஆ5/2026 நாள். 15.09.2026

(நகல்)– தக்க நடவடிக்கைக்காக அனைத்து வகை பள்ளிகளுக்கு அனுப்பலாகிறது.

பெறுநர்

முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்–632 009

அனைத்து வகை பள்ளித் தலைமையாசியர்கள்,
வேலூர் மாவட்டம்.

15/9/26

நகல் –

1. மாவட்டக் கல்வி அலுவலர்கள், (இடைநிலை / தனியார் பள்ளிகள் / தொடக்கக் கல்வி) வேலூர் மாவட்டம். (உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு) (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)